பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

10 01 2025 **FRIDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அனைத்து பிரச்சினைகளுக்கும் அடுத்த 22 ஆண்டுகளுக்குள் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே தமது விருப்பம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தமிழகத்தின் ரயில்வே வளர்ச்சித் திட்டங்களுக்கு மாநில அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. தமிழகத்திற்கான வரி பகிர்வாக 7 ஆயிரத்து 57 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

4. கட்சி பாகுபாடு இன்றி அனைத்துத்தரப்பினரையும், தமிழக காவல்துறை சமமாக நடத்த வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

5. அயர்லாந்துக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ----

**<<<<<>>>>>**

அனைத்து பிரச்சினைகளுக்கும் அடுத்த 22 ஆண்டுகளுக்குள் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே தமது விருப்பம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தொழில்முனைவோர் **Nikhil Kamath-**க்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறந்த தலைமைப்பண்பு மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றினால் அரசியலில் வெற்றி உறுதி என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

நல்ல மனிதர்கள் தொடர்ந்து அரசியலுக்கு வர வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

லட்சியம் மட்டுமின்றி, அதற்கான இலக்குகளை எட்டுவதற்கு உறுதியுடன் அவர்கள் பணியாற்ற வேண்டும் என்றும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<>>>>>

உற்பத்தித்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சென்னையை அடுத்த தாம்பரத்தில் உள்ள மடிக்கணினி உற்பத்தி செய்யும் நிறுவனம் தைவான் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின்கீழ், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு வெளிநாடுகளில் வர்த்தக வாய்ப்பு ஏற்படுத்தித்தரப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம், கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

முன்னதாக, பெரம்பூர் ரயில்பெட்டி தொழிற்சாலையில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு அஷ்வினி வைஷ்ணவ், தமிழகத்தின் ரயில்வே வளர்ச்சித் திட்டங்களுக்கு மாநில அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்கினை எட்டுவதற்கான பணிகள் விரைவாக நடைபெற்றுவருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

கேரள மாநிலம் கொல்லத்தில் மரக்கன்றுகள் நடும் இயக்கத்தில் பங்கேற்று பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறதியுடன் உள்ளதாக அவர் தெரிவித்தார்

இதன் காரணமாகத்தான் அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கத்தை பிரதமர் தொடங்கிவைத்ததாக அவர் கூறினார்.

கரியமில வாயுவின் வெளியேற்றத்தை முற்றிலுமாக தடுக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு எல். முருகன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

மாநில அரசுகளுக்கான வரி பகிர்வாக ஒரு லட்சத்து 73 ஆயிரத்து 30 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

இதன்படி, தமிழகத்திற்கு 7 ஆயிரத்து 57 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

டிசம்பர் மாதத்திற்கு 89 ஆயிரத்து 86 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது கூடுதலாக இந்த தொகை வழங்கப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூலதன செலவினங்களை விரைவுப்படுத்தவும், வளர்ச்சித்திட்டங்களுக்கான செலவினங்களுக்காகவும், இந்த கூடுதல் தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

உயர்கல்வித்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தென் மண்டல துணைவேந்தர்கள் பங்கேற்ற கருத்தரங்கினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

ஆராய்ச்சியுடன் கூடிய உயர்கல்விக்கு பல்கலைக்கழகங்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களின் எதிர்கால நலனை கருத்தில்கொண்டே புதிய கல்விக்கொள்கை கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அறிவுசார் தொழில்நுட்பங்களை உருவாக்குவதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று திரு ஆர் என் ரவி கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

மின்வாரிய ஊழல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக மக்கள் மீது கடந்த மூன்றாண்டுகளாக மின் கட்டண உயர்வு சுமத்தப்பட்டிருக்கும் நிலையில், மின்வாரியம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

40 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மின் கட்டணம் உயர்த்திய பின்னரும், 4 ஆயிரத்து 435 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏன் என்றும் அவர் வினவியுள்ளார்.

இதுகுறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் திரு அன்புமணி ராமதாஸ் கோரியுள்ளார்.

<<<<<>>>>>

முதுபெரும் பின்னணி பாடகர் ஜெயச்சந்திரன் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் இதனை தெரிவித்துள்ள அவர், பல்வேறு மொழிகளில் அவர் பாடியுள்ள பாடல்கள் என்றென்றும் நம் மனதில் நீங்கா இடம்பெற்றிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாகுபாடு காட்டாமல் அனைத்துத்தரப்பினரையும் சமமாக நடத்த வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், காவல்துறைக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பான வழக்கு ஒன்றினை விசாரணை செய்த நீதிபதி திரு வேல்முருகன், போராட்டங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்குவது தொர்பான பிரச்சினைகளில் காவல்துறையினர் ஒரே மாதிரியான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

ஒருதரப்புக்கு ஒரே நாளில் அனுமதி அளிப்பதும், மற்றவர்களின் கோரிக்கையை பரிசீலிக்காமல் இருப்பதும் கூடாது என்றும் நீதிபதி தெரிவித்தார்.

போராட்டங்களுக்கு அனுமதி கோரிய விண்ணப்பங்கள் மீது குறித்த காலத்திற்குள் முடிவெடுக்க வேண்டும் என்று கூறிய நீதிபதி, இவ்விசாரணையை வரும் 23-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

<<<<<>>>>>

பொங்கல் பண்டிகையையொட்டி பல வண்ணங்களால் ஆன மண்பானைகள் விற்பனை தீவிரமடைந்துள்ளது.

தூத்துக்குடியில் பொதுமக்கள் ஆர்வத்துடன் இவற்றை வாங்கி செல்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - லஷ்மணன் - 36 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மதுரை மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கான முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்து மாநில அமைச்சர் திரு மூர்த்தி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-----------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நியாயவிலைக்கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணிகளை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

---------------

நாகை மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு மாதத்தையொட்டி, தலைக்கவசம் அணிவதை வலியுறுத்தும் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ஆகாஷ் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

தூத்துக்குடி மாவட்டத்தில் மீனவர்கள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திரு இளம்பகவத் தலைமையில் இன்று நடைபெற்றது.

-----------

சென்னை எழும்பூர் - திருநெல்வேலி இடையேயான வந்தேபாரத் விரைவு ரயில் வரும் 15-ஆம் தேதிமுதல், 16 பெட்டிகளுடன் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

அயர்லாந்துக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ராஜ்கோட்டில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த அயர்லாந்து, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில், 7 விக்கெட் இழப்பிற்கு 238 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக **Gaby Lewis** 92 ரன் எடுத்தார்.

பிரியா மிஸ்ரா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

239 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா, 34 புள்ளி மூன்று ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 241 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

அதிகபட்சமாக, பிரதிகா ராவல் 89 ரன் எடுத்தார்.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

----------------

மலேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 26-24, 21-15 என்ற செட் கணக்கில் மலேசியாவின் **E.Y.Teo – Y.S. Ong** இணையை வென்றது.

--------

ஆசியகோப்பை மகளிர் உள்ளரங்கு கால்பந்து தகுதிச்சுற்று போட்டிக்கான 14 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி, இந்தோனேஷியாவில் வரும் 15-ஆம் தேதி தொடங்கி, 19-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

-------------

புதுதில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<END>>>>>**